தினமணி

# மாநிலத்தில் 43 புதிய திட்டங்கள்: முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு

First Published : 15 Nov 2011 02:25:33 AM IST

Last Updated : 15 Nov 2011 03:35:45 AM IST




சென்னையில் இரண்டாவது நாளாக நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் - காவல் துறை உயரதிகாரிகள் மாநாட்டில் உரையாற்றும் முதல்வர் ஜெயலலிதா. உடன், (இடமிருந்து) தலைமைச்

சென்னை, நவ. 14: மாவட்ட ஆட்சியர்களின் கோரிக்கைகளை ஏற்று, மாநிலம் முழுவதும் பல்வேறு முக்கிய நகரங்கள், சிற்றூர்களில் 43 புதிய திட்டங்களை முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

மேலும், மக்கள் நலத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சியர்கள் குழுவுடன் விடியோ கான்ஃபரன்சிங் முறை மூலம் மாதந்தோறும் விவாதிக்க இருப்பதாக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

சென்னையில் இரண்டு நாட்கள் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டை முடித்து வைத்து அவர் பேசியது:

ஒரு நல்லாட்சி என்பது வலுவான மற்றும் சிறந்த கூட்டு முயற்சியின் மூலம் மட்டுமே சாத்தியப்படும். மாவட்ட ஆட்சியர்கள் மீது மிகப்பெரிய நம்பிக்கை வைத்துள்ளேன். மக்களின் விருப்பங்கள் மிகப்பெரிய அளவில் உள்ளது. அவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டும். எனவே, எனது எதிர்பார்ப்புகளை நீங்கள் நிறைவு செய்வீர்கள் என நம்புகிறேன்.

**வேளாண்மைக்கு முக்கியத்துவம்:** எனது அரசில் வேளாண்மைக்கு முதன்மையான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. வேளாண்மைக்குத் தேவையான அனைத்து இடுபொருள்களையும் உரிய காலத்தில் வழங்கிட வேண்டும். உரம் போன்ற பொருள்களைத் தேவையின்போது

வழங்காமல் பின்னர் வழங்கினால் அது வீணானதாகும். எனவே, இந்த விஷயத்தில் மாவட்ட ஆட்சியர்கள் சாதுர்யமாகச் செயலாற்றிட வேண்டும்.

விவசாயிகள் தங்கள் கிராமங்களைவிட்டுச் செல்கிறார்களா? அவர்களின் வாழ்வில் அமைதி, நிம்மதி ஏற்படுகிறதா? உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறதா போன்ற அம்சங்களைக் கண்காணிக்க வேண்டும்.

குழந்தைகள்-இளைஞர்கள்: தனிப்பட்ட முறையில் என்னுடைய விருப்பமான துறை குழந்தைகள் மற்றும் இளைஞர் நலனாகும். ஒவ்வொரு குழந்தையும் சரியான கல்வி வாய்ப்பு, சிறந்த சுகாதாரம் ஆகியவற்றைப் பெற்றிட வேண்டும். குழந்தைகளை சமுதாயத்தின் மதிப்புமிக்க சொத்துகளாக உருவாக்க வேண்டும்.

மகளிர் நலனிலும் ஆட்சியர்கள் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, மகளிரின் சுகாதாரம், கல்வி, வருவாயைப் பெருக்கும் வழிமுறைகளுக்கு ஆட்சியர்கள் மிகுந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

பொது விநியோகத் திட்டம்: பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பொருள்கள் ரேஷன் கடைகளில் சரியாக இருப்பு வைக்கப்படுகிறதா, சரியாக வழங்கப்படுகிறதா என்பதை உறுதி செய்திட வேண்டும். பெண்களின் சுகாதாரத்தைப் பேணும் வகையில் மகளிர் சுகாதார வளாகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதுபோன்ற கிராமப்புற மேம்பாட்டுத் திட்டங்களின் செயல்பாடுகளை வாரத்துக்கு ஒருமுறை கண்காணிக்க வேண்டும்.

மக்களுக்குக் குடிநீர் வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். வீட்டு வாசலுக்கே குடிநீர் வசதி கிடைக்காவிட்டாலும், அருகிலாவது கிடைப்பதற்கு வழி செய்திட வேண்டும். நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர் தொலைவுக்குக் குடிநீர் குழாய்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அமைத்துள்ளது. அதில், எந்தப் பிரச்னையும் ஏற்படாமல் கண்காணிப்பது அவசியம்.

அரசுக்குச் சொந்தமான நிலங்கள் சமூக விரோதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதைத் தடுக்க வேண்டும். கோயில் நிலங்கள், உள்ளாட்சித் துறைக்குச் சொந்தமான நிலங்கள், மத்திய அரசின் புறம்போக்கு நிலங்கள் ஆகியவற்றில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லாதபடி தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும்.

டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த ஆட்சியர்கள் அங்குள்ள வேளாண்மைப் பணிகள், குறிப்பாக, அறுவடைக்குப் பிந்தைய பணிகள், உணவு தானியம் வீணாவதைத் தடுப்பது, உணவுப் பொருள்களின் திருட்டைத் தடுப்பது போன்றவற்றில் யுக்திகளைக் கையாள வேண்டும்.

கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த ஆட்சியர்கள், மீன்வளத் துறையின் திட்டங்கள் தொடர்பாக நல்ல புரிதலைக் கொண்டிருக்க வேண்டும். சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த ஆட்சியர்கள், சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்னைகளில் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, குப்பை கொட்டும் தளங்கள், நீர் நிலைகள் பாதுகாப்பு ஆகியவற்றில் தங்களது கவனத்தைச் செலுத்திட வேண்டும்.

43 புதிய திட்டங்கள்: மக்கள் நலத் திட்டங்கள் தொடர்பாக, மாவட்ட ஆட்சியர்களின் குழுவுடன் விடியோ கான்ஃபரன்சிங் முறை மூலம் மாதந்தோறும் ஆலோசனை நடத்தத் திட்டமிட்டுள்ளேன். அப்போது, மாவட்டங்களில் உள்ள சத்துணவுக் கூடங்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் விடுதிகள், சுகாதார வளாகங்கள், கிராமச் சாலைகள், ரேஷன் கடைகள் உள்ளிட்ட காட்சிகளை ஆட்சியர்கள் காண்பித்து அதன் செயல்பாடுகளைத் தெரிவிக்க வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா பேசினார்.

இதன்பின்பு, 43 புதிய திட்டங்களுக்கான அறிவிப்புகளை வெளியிட்டார். அதில் குறிப்பாக, தூத்துக்குடியில் புதிய சரக்கு முனையம் அமைப்பது, கோவை, திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் சாலைகள், மேம்பாலங்கள் அமைப்பது, கிராம நிர்வாக அலுவலர்களுக்கு லேப்டாப் கம்ப்யூட்டர், பிரிண்டருடன் வழங்குவது உள்ளிட்ட பல்வேறு முக்கிய அறிவிப்புகளை முதல்வர் வெளியிட்டுள்ளார்.

உத்தரவுகளை வெளியிட வேண்டும்: பல்வேறு மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக் கொண்ட கோரிக்கைகளின் படி புதிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இதை, சம்பந்தப்பட்ட துறைகளின் செயலாளர்கள் உறுதி செய்து உரிய உத்தரவுகளை உடனடியாக வெளியிட வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா கேட்டுக் கொண்டுள்ளார்.

திட்டங்களின் விவரம்

* கோவையில் உள்ள மேட்டுப்பாளையம் சாலை, திருச்சி சாலை, அவிநாசி சாலை, பொள்ளாச்சி சாலை, சத்தியமங்கலம் சாலைகள் மேம்படுத்தப்படும்.

* உக்கடம், ஆத்துப்பாலம், வடக்கு சுற்றுச்சாலை ஆகிய இடங்களில் மேம்பாலங்கள் கட்டப்படும்.

* ராமநாதபுரம் மாவட்டம் ஆழ்கடல் மீன்பிடிப்பு இனி, டோக்கன் முறை மூலம் ஒரு நாளைக்கு இரண்டு முறைக்கு மேல் அனுமதிக்கப்படும்.

* அரியலூர் மாவட்டத்தில் சேதம் அடைந்துள்ள 42 கி.மீ. நீளமுள்ள சாலை சீரமைக்கப்படும்.

* கனரக வாகனங்கள் செல்வதற்கு ஏற்ற வகையில் சாலைகள் அமைப்பது தொடர்பாக அந்த மாவட்டத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

* ஈரோடு மாவட்டம் மாரியம்மன் கோயில் அருகே புதிய மேம்பாலம் அமைக்கப்படும்.

* ஈரோடு மாவட்டம் சி.எஸ்.ஐ. தேவாலயம் அருகே சாலை விரிவுபடுத்தப்படும்.

* காரமடை வழியாக உதகைக்குப் புதிய வழித்தடம் குறித்த சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.

* தூத்துக்குடி மாவட்டத்தில் சாலைப் போக்குவரத்தைக் குறைக்கும் வகையில் புதிய சரக்கு முனையம் அமைக்கப்படும்.

* பெரியகுளம் - கொடை ரோடு சாலையை விரிவுபடுத்துவது குறித்து ஆராயப்படும்.

* நாகப்பட்டினத்தில் மீன்வள தொழில்நுட்ப கல்வி நிறுவனம் அமைக்கப்படும்.

* பொன்னேரி வருவாய் கோட்டம் பிரிக்கப்பட்டு, அம்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்கப்படும். அதில், அம்பத்தூர், மாதவரம் தாலுகாக்கள் இருக்கும்.

* சிவகாசி அரசு மருத்துவமனையில் தீக்காய சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படும்.

* திருவண்ணாமலையில் நடைபெறும் மகாதீப திருவிழாவுக்கு மாநில அரசின் பங்கான 50 சதவீதம் 70 சதவீதமாக உயர்த்தப்படும்.

* சித்ரா பௌர்ணமி தினம் மதப் பண்டிகையாக அறிவிக்கப்படுகிறது.

* வேலூர் சி.எம்.சி. மருத்துவமனை சந்திப்பில் புதிய மேம்பாலம் அமைக்கப்படும்.

* வேலூரில் சுற்றுச்சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

* பட்டாசு ஆலைகளில் பணியாற்றுவோருக்கான பயிற்சி முகாம், சிவகாசியில் அமைக்கப்படும்.

* நாமக்கல் புறநகர்ப்பகுதியில் பஸ் கட்டுமானத்துக்கான பிரிவு தொடங்கப்படும்.

* கடலில் மீனவர்கள் காணாமல் போகும் நேரங்களில் தேவையின் அடிப்படையில் ஹெலிகாப்டர்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டு தேடுதல் பணிகள் முடுக்கிவிடப்படும்.

* தேடுதல் பணியில் ஈடுபடும் கடலோர போலீஸôருக்கு அதிவேக படகுகள் வழங்கப்படும்.

* தூத்துக்குடி நகருக்கு கூடுதல் தண்ணீர் அளிக்கப்படும்.

* தூத்துக்குடியில் ஒருங்கிணைந்த பஸ் நிலையம்.

* தூத்துக்குடி வி.வி.டி. சந்திப்பில் புதிய மேம்பாலம் அமைக்கப்படும்.

* பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்தெடுக்கும் பயிற்சி சுய உதவிக் குழுக்களுக்கு அளிக்கப்படும். அந்தக் கழிவுகளைக் கொண்டு சாலைகள் அமைக்கப்படும்.

* எஸ்.எம்.எஸ். முறை மூலம் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஆசிரியர்களின் வருகை பதிவு கணக்கிடப்படும்.

* கடலூர் மாவட்டத்துக்கென ஒரு பெருந்திட்ட வளாகத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

* புதிதாக கட்டப்படும் அரசு விடுதிகளில் சூரிய மின் சக்தி அமைப்புகள் நிறுவப்படும்.

* மேட்டூர் அணையில் இருந்து ஜூனில் தண்ணீர் திறக்கப்படுகிறது. அதற்கு முன்பாக, அங்குள்ள கால்வாய்களைத் தூர்வாரும் பணிக்கான நிர்வாக ஒப்புதல் ஜனவரியிலேயே அளிக்கப்படும்.

* திருவாரூர் மாவட்டத்தில் உள்ள கால்வாய்களில் தண்ணீர் சீராகச் செல்லும் வகையில் ஒருங்கிணைந்த அளவில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

* தருமபுரி மாவட்டம் வத்தல்மலையில் 12 கிலோ மீட்டர் நீளத்துக்கு இணைப்புச் சாலை திட்டம் செயல்படுத்தப்படும். இந்த மலைப்பகுதியில் சுற்றுலா தலமாக்க சுற்றுலாத் துறை நடவடிக்கை எடுக்கும்.

* கிருஷ்ணகிரியில் உள்ள தோட்டக் கலை விவசாயிகள் பயன்பெறும் வகையில், அங்குள்ள மாம்பழங்களை கொள்முதல் செய்து, மாம்பழக் கூழுடன் பால் சேர்த்த கலவையை மதிய உணவுத் திட்டத்தில் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆவின் நிறுவனம் மேற்கொள்ளும்.

* அரியலூர் மாவட்டம் மருதயாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்கப்படும்.

* மேட்டூரில் இருந்து தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டவுடன் அனைத்து கால்வாய்களையும் பராமரிக்கும் பணி தொடங்கப்படும். அணை ஜூனில் திறக்கப்படும் போது, அவை நல்ல முறையில் இருப்பதற்கு வழி செய்யப்படும்.

* தேசிய தோட்டக்கலை இயக்கத்தில் சிறிய வெங்காயத்தையும் சேர்த்து, அவற்றை பயிரிடும் விவசாயிகள் பயன்பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

* பெரம்பலூர் மாவட்டத்தில் ஒழுங்கு முறை விற்பனை சந்தை அமைக்கப்படும்.

* திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவமனையில் விபத்து சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்படும். இதன்மூலம், 60 கிலோமீட்டர் பயணம் செய்து சென்னையிலுள்ள ஸ்டான்லி மருத்துவமனைக்கு வருவது தவிர்க்கப்படும்.

* மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியம் பெறுவதற்கான குறைந்தபட்ச வயதின் அளவு 45-லிருந்து 18 ஆகக் குறைக்கப்படும்.

* அனைத்து மாவட்டங்களிலும் சட்டப் பிரச்னைகளை எதிர்கொள்ள மாவட்ட ஆட்சியருக்கு தனி உதவியாளர் நியமிக்கப்படுவார்.

* கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பிரிண்டருடன் இணைந்த லேப்டாப் கம்ப்யூட்டர்கள் வழங்கப்படும்.


* தூத்துக்குடி மாவட்டம் கோரப்பள்ளம் கண்மாய் தூர்வாரப்பட்டு, அதன் கரைகள் பலப்படுத்தப்படும்.

* கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வருவாய் கிராமங்கள் பெரிய அளவில் உள்ளன. எனவே, அவை மறுசீரமைப்பு செய்யப்படும்.

* கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் விசாரணைகளை பொதுப்பணித் துறை மேற்கொள்ளும்.

**பணவீக்கம் 9.73 % ஆக உயர்வு**

First Published : 15 Nov 2011 01:28:26 AM IST




புது தில்லி, நவ.14 : நாட்டின் பொது பண வீக்கம் அக்டோபர் மாதத்தில் 9.73 சதவீதமாக உயர்ந்துள்ளது. தொடர்ந்து 11-வது மாதமாக இது 9 சதவீதத்துக்கு மேல் உள்ளது என்பது குறிப்பிடதக்கது.

உணவுப் பொருள்கள், எரி பொருள், உற்பத்தி பொருள்களின் விலை உயர்வினால் பொது பண வீக்கம் இரட்டை இலக்கத்தை தொடும் அளவுக்கு உயர்ந்துள்ளது.

மொத்த விலை குறியீட்டெண் அடிப்படையில் பணவீக்கம் கணக்கிடப்படுகிறது. முந்தைய மாதம் (செப்டம்பர்) பொது பணவீக்கம் 9.72 சதவீதமாக இருந்தது. அக்டோபர் மாதம் சற்று உயர்ந்து 9.73 சதவீதமாக அதிகரித்துள்ளது.

ஆண்டுக் கணக்கில். உணவுப் பொருள்களின் விலை 11.06 சதவீதம் உயர்ந்துள்ளது. செப்டம்பரில் உணவுப் பணவீக்கம் 9.23 சதவீதமாக இருந்தது. காய்கறிகளின் விலை 21.76 சதவீதம் உயர்ந்துள்ளது. பழங்களின் விலை 11.96 சதவீதமும், பால் 11.12 சதவீதமும், முட்டை,இறைச்சி,மீன் போன்றவற்றின் விலை 12.59 சதவீதமும் அக்டோபரில் உயர்ந்துள்ளது.

ஒட்டு மொத்த முதன்மைப் பொருள்களின் பணவீக்கம் 11.49 சதவீதமாக உள்ளது. இதற்கு முந்தைய மாதம் இது 11.84 சதவீதமாக இருந்தது. இழைகள், எண்ணெய் வித்துக்கள், கனிமங்கள் போன்ற உணவு சாரா பொருள்களின் விலை 7.71 சதவீதமாக உள்ளது. முந்தைய மாதம் இது 14.82 சதவீதமாக காணப்பட்டது. மொத்த விலை குறியீட்டெண்ணில் , 65 பங்கை கொண்டுள்ள உற்பத்திப் பொருள்களின் விலை 7.66 சதவீதம் உயர்ந்துள்ளது. உற்பத்தி பொருள்களில், உருக்கு உள்ளிட்டவற்றின் விலை 21.67 சதவீதமும், சமையல் எண்ணெய் விலை 13.09 சதவீதமும், புகையிலைப் பொருள்களின் விலை 12.53 சதவீதமும் உயர்ந்துள்ளன. எரிபொருள் மற்றும் மின்துறை பணவீக்கம் 14.79 சதவீதமாக உள்ளது.

பணவீக்கத்தை கட்டுக்குள் கொண்டு வர மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும் எடுத்து வரும் நடவடிக்கைகள் போதிய பலனை அளிக்கவில்லை. 2010-ம் ஆண்டு மார்ச் முதல் இதுவரை பணவீக்கத்தை கட்டுப்படுத்த 13 முறைகளுக்கு மேல் வட்டிவகிதங்களை ரிசர்வ் வங்கி உயர்த்தியுள்ளது.

டிசம்பர் மாத மத்தியில் மூன்றாவது காலாண்டுக்கான நிதிக் கொள்கையை இது அறிவிக்கவுள்ளது. அப்போது வட்டிவிகிதங்கள் உயர்த்தப்படாது எனத் தெரிகிறது. எனவே,

மாற்றுவழிகள் மூலம் பணவீக்கத்தை கட்டுப்படுத்த மத்திய அரசும் ரிசர்வ் வங்கியும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளன.

கடன்கள் மீதான வட்டி விகிதங்கள் உயர்வால் தொழில் துறை பாதிக்கப்பட்டுள்ளது. தொழில் துறை உற்பத்தி 1.9 சதவீதமாக செப்டம்பரில் சரிந்துள்ளது. இரண்டு ஆண்டுகளில் இதுவே மிக குறைந்த அளவாகும். ஏப்ரல்-ஜூன் மாதம் வரையிலான காலத்தில் பொருளாதார வளர்ச்சி 7.7 சதவீதமாக உள்ளது. கடந்த மாதம் இரண்டாவது நிதிக் கொள்கையை அறிவித்த போது, பணவீக்கம் டிசம்பர் மாத வாக்கில் குறையத் தொடங்கும் என்றும், அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இது 7 சதவீதத்திற்கு கீழ் இருக்கும் என்றும் ரிசர்வ் வங்கி நம்பிக்கை தெரிவித்தது.

பண வீக்கம் குறையும் : பருவ மழை பொழிவு நன்குள்ளதால், வேளாண் உற்பத்தி அதிகரிக்கும் என்றும் இதனால் பணவீக்கம் குறையும் என்றும் மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார். இரட்டை இலக்க அளவை தொடும் அளவுக்கு அது உயர்ந்ததற்கு உணவுப் பொருள்களின் விலை உயர்வே காரணம் என்றார் அவர்.

"" பருவ மழையின் பலன், உணவுப் பொருள்கள் விநியோகத்தை மேம்படுத்த மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக பணவீக்கம் கட்டுப்படும். கடந்த 7 மாதங்களில் ( ஏப்ரல்-அக்டோபர்) உணவுப் பொருள்களின் விலை உயர்வினால் பொது பணவீக்கம் அதிகரிக்க காரணமாகும் " என்று அவர் குறிப்பிட்டார். முதன்மைப் பொருள்களின் விலை குறைவினால் கிடைக்கும் பலனை, அதிகரித்து வரும் உணவுப் பொருள்களின் விலை சமன் செய்துவிட்டதாகவும் அவர் தெரிவித்தார். உணவுப் பணவீக்கத்தை குறைக்க, விநியோக முறையில் உள்ள கட்டுப்பாடுகளை நீக்குவது குறித்து பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பொருளாதார வளர்ச்சி பாதிப்பு: ஐரோப்பிய நாடுளின் நிதி நெருக்கடியால், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியும், ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

"" ஐரோப்பிய நாடுகளின் சமீபத்திய நிகழ்வுகள், நிதிச் சந்தையில் தெளிவற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளன. இதனால் இந்தியாவின் குறுகிய-கால வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சி குன்றிய நேரத்தில் பாதுகாக்கும் நோக்கத்துடன் எடுக்கப்பட்ட சில வளர்ந்த நாடுகளின் நடவடிக்கைகளால், இந்தியாவின் ஏற்றுமதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன" என்றார் அவர். ஐரோப்பிய நாடுகளின் பிரச்னை நீடித்தால், இந்தியாவின் ஏற்றுமதி கணிசமாக குறையும் என்றும் அவர் குறிப்பிட்டார். தில்லியில் இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியை தொடங்கி வைத்து பேசிய போது அவர் இதை தெரிவித்தார்.

ஏப்ரல்-அக்டோபர் வரையிலான காலத்தில் இந்தியாவின் ஏற்றுமதி 46 சதவீதம் அதிகரித்துள்ளது. ஆனால் அக்டோபரில் ஏற்றுமதியில் சரிவு காணப்பட்டது. ஏற்றுமதி வளர்ச்சி 10.8 சதவீதமாக குறைந்தது. 27 நாடுகள் இடம் பெற்றுள்ள ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள்தான் அதிகளவில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்கின்றன. கிரேக்கம், இத்தாலி உள்ளிட்ட நாடுகளில்

ஏற்பட்டுள்ள கடன் பிரச்னை, பெரிய நிதி நெருக்கடியாக மாறும் சூழல் உருவாகி வருகிறது. இதனால் அக்கூட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் இந்தியாவில் பாதிப்பை ஏற்படுத்தும் எனலாம்.

**மரவள்ளி டன்னுக்கு ரூ.2 ஆயிரம் விலை வீழ்ச்சி: விவசாயிகள் வேதனை**

First Published : 15 Nov 2011 12:40:06 AM IST



பண்ருட்டி, நவ. 14: மரவள்ளிக் கிழங்கு விலை கடந்த இரு மாதத்தில் டன்னுக்கு ரூ. 2 ஆயிரம் வரை வீழ்ச்சி அடைந்துள்ளதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

கடலூர் மாவட்டம் கடலூர், பண்ருட்டி, திட்டக்குடி, விருத்தாசலம், குறிஞ்சிப்பாடி பகுதியில் சுமார் 11 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. விவசாயிகளிடம் கிழங்குகளை வாங்கிச் செல்லும் வியாபாரிகள், சேலம் மற்றும் ஆத்தூர் பகுதி ஆலைகளில் விற்பனை செய்கின்றனர். மரவள்ளியில் இருந்து ஜவ்வரிசி, டார்ச், குளுக்கோஸ் உள்ளிட்டவை தயாரிக்கப்படுகிறது. கடந்த இரு மாதங்களுக்கு முன் டன் ரூ.6 ஆயிரத்திற்கு விலை போன கிழங்கு, இப்போது ரூ.4 ஆயிரம் மட்டுமே விற்பனையாகிறது.

இதுகுறித்து பண்ருட்டி வட்டம் எஸ்.ஏரிப்பாளையம் கிராமத்தை சேர்ந்த விவசாயி திருநாவுக்கரசு (70) கூறியது: நவம்பர், டிசம்பர் மாதங்களில் மணிலா விதைக்கும் போது மரவள்ளியை ஊடு பயிராக நடவு செய்வோம். ஒரு ஏக்கருக்கு 8 முதல் 12 டன் வரை மரவள்ளி மகசூல் கிடைக்கும். யூரியா, மருந்து, கூலி என ஏக்கருக்கு ரூ.6 ஆயிரம் வரை செலவாகும்.

வியாபாரிகளே தோட்டத்திற்கு வந்து கிழங்குகளை பிடுங்கி எடுத்துச் செல்வார்கள். டன் ஒன்றுக்கு 50 கிலோவை (மண் ஒட்டியிருப்பதால்) கழித்துவிடுவர்.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் டன் ரூ.6 ஆயிரத்துக்கு விற்பனையானது. இப்போது ஒரு டன் ரூ.4 ஆயிரம் மட்டுமே விலை போகிறது. அனைத்து பொருட்களின் விலையும் உயர்ந்து வரும்

நிலையில், விவசாயப் பணிக்கு ஆள் கிடைக்காத நிலையிலும், விவசாயிகள் விளைவிக்கும் பொருள்களின் விலை மட்டும் குறைந்துகொண்டே வருவது வேதனை அளிக்கிறது.

விவசாயிகளின் நலன் கருதி மரவள்ளி கிழங்கிற்கு உரிய விலையை தமிழக அரசு நிர்ணயம் செய்ய வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

**விவசாயிகளுடன் இணைந்து பணியாற்றுங்கள்: ஜெயலலிதா**

First Published : 14 Nov 2011 01:26:35 AM IST



சென்னை தலைமைச் செயலகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்ற மாவட்ட ஆட்சியர்கள், காவல் துறை அதிகாரிகள்.

சென்னை, நவ. 13: மாநில அரசின் வேளாண் திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்த விவசாயிகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர்களை முதல்வர் ஜெயலலிதா அறிவுறுத்தினார்.

முதல்வர் ஜெயலலிதா தலைமையில் மாவட்ட ஆட்சியர்கள்-காவல் துறை உயர் அதிகாரிகளின் 2 நாள் மாநாடு சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மாநாட்டைத் தொடங்கிவைத்து முதல்வர் ஆற்றிய உரை:

ஒவ்வொரு முறையும் மாநிலத்தில் நான் ஆட்சி பொறுப்பு ஏற்கும்போதெல்லாம் நிர்வாக அமைப்பும், பொருளாதாரமும், நிதி நிலையும் ஒழுங்குபடுத்தப்படும்.

ஆட்சியின் அனைத்துச் செயல்பாடுகளும் வெளிப்படைத்தன்மையுடன் சிறந்த முறையில் இருக்க வேண்டும். மக்கள் என் மீது முழு நம்பிக்கை வைத்து தேர்தலில் மிகப் பெரிய வெற்றியைத் தந்துள்ளனர். அவர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய வேண்டும். தேர்தலின்போது என்னால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் இப்போது அரசின் நலதிட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தின் அனைத்து மக்களும் எல்லாம் பெற வேண்டும் என்பதே என் கனவு. ஏழைகளும் நல்ல தரமான வாழ்வு பெற அனைத்து உதவிகளையும் செய்ய இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

இந்த மாநாட்டின் முக்கிய நோக்கங்கள், மாநிலத்தின் சட்டம்-ஒழுங்கு நிலைமையை கண்டிப்பான முறையில் பின்பற்றுவது; சிறப்பான முறையில் சேவையை வழங்குவது; பொருளாதார

வளர்ச்சியை வேகப்படுத்துவது; மாநிலத்தின் உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டை குறிப்பிடத்தக்க அளவு விரைவாக உயர்த்துவது ஆகியனதான்.

வேளாண், சுகாதாரம், கல்வித் துறை சார்ந்த திட்டங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

இணைந்து பணியாற்ற வேண்டும்: இந்த அரசு வறுமையை ஒழிக்கவும் நகரம்-கிராமம் என்ற பாகுபாடின்றி இரண்டுக்கும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், வருவாய் வேறுபாட்டை விலக்குவதிலும் தொழில்திறன்களை மேம்படுத்துவதிலும், வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும் ஆர்வம் கொண்டுள்ளது.

இந்த அரசு வேளாண் துறைக்கு பல கோடி செலவு செய்து வருகிறது. இருந்தும் விவசாயிகளின் வருவாயில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் விவசாயத்தின் பங்கு மிகக் குறைவாகவே உள்ளது.

எனவே, விவசாயத்துறைக்கு இந்த அரசு முக்கியத்துவம் தருகிறது. வேளாண் துறையில் நவீன தொழில்நுட்பங்களையும், திறமையான முறையில் நீரை பயன்படுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

விவசாயம் மற்றும் அறுவடைக்கு பின்னுள்ள வேளாண் தொழில் நடைமுறைகளை நவீனமாக்குவதன் மூலம் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தி வேளாண் உற்பத்தித் திறனை அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் மூலம் கண்டிப்பாக இரண்டாவது பசுமை புரட்சி ஏற்படும் என்று உறுதியாக நம்புகிறேன். இதில் மாவட்ட ஆட்சியர்களின் பங்கு மிக முக்கியமானது. வரும் 5 ஆண்டுகளில் விவசாயிகளின் வருமானத்தை 3 மடங்கு அதிகரிக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இதற்கு மாவட்ட ஆட்சியர்கள், விவசாயிகளுடன் நெருங்கி பழக வேண்டும். வேளாண் திட்டங்களை மாவட்டங்களில் சீரிய முறையில் அமல்படுத்த வேண்டும். அரசின் இலவச மாடு, ஆடுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் கிராமப்புற மக்களின் நிலைத்த வருவாய்க்கு வழி ஏற்பட்டுள்ளது. மீன்வளத் துறையை பொருத்தவரையில் கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த ஆட்சியர்கள், மீன்வளத் துறை தொடர்பான திட்டங்களை சிறப்பாக அமல்படுத்த வேண்டும். ஆழ்கடல் மீன்பிடிப்பு, மீன் பிடி துறைமுகங்கள், மீன் பதப்படுத்தும் பூங்காக்கள் போன்ற கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த வேண்டும் என்றார் முதல்வர் ஜெயலலிதா.

**மானியத்துடன் கூடிய விவசாய நிலங்களில் தீவனப் பயிர்கள் வளர்ப்புத் திட்டம்**

First Published : 14 Nov 2011 11:38:49 AM IST

திண்டுக்கல், நவ. 13: மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ், தீவனப் பற்றாக்குறையை குறைக்க விவசாய நிலங்களில் தீவனப் பயிர்களைப் பயிரிடும் திட்டத்தை அரசு கொண்டு வந்துள்ளது.

இலவச கறவை பசுக்கள், வெள்ளாடு, செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தில் கொடுக்கப்படும் 60 ஆயிரம் கறவை மாடுகள் மற்றும் 28 லட்சம் வெள்ளாடுகள் செம்மறி ஆடுகளின் தீவன தேவையை நிறைவு செய்யவும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதற்காக, அதிக விளைச்சலைத் தரக்கூடிய தீவனப் பயிர்களை விவசாயிகளின் 24 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் பயிரிடவும், அரசுப் பல்கலைக்கழகப் பண்ணைகளில் தீவன விதை உற்பத்தி பிரிவுகள் நிறுவுவதற்காகவும், நீர் சேமிப்பு இயந்திரங்களை நிறுவதற்காகவும், பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனங்களில் உள்ள உயிர் சத்துக்களின் பயன்பாட்டை அதிகரிக்கவும், மானிய விலையில் மின்சக்தியில் இயங்கும் தீவன வெட்டிகள், புல்வெட்டிகள் மற்றும் தீவன உற்பத்தி மற்றும் பயன்பாடு குறித்த பயிற்சி மற்றும் தகவல், கல்வி மற்றும் தொடர்பு இயக்கம் ஆகியவை ரூ. 20 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட உள்ளன.

திண்டுக்கல் மாவட்டத்தில் அதிக மகசூல் தரும் தீவன பயிர் சாகுபடிக்கு 280 ஏக்கர் நிலம் இறவை சாகுபடியில் 1,120 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, 100 சதவீத மானியமாக 2,590 ரூபாயும், 600 ஏக்கர் மானாவாரியில் சாகுபடி செய்ய 2400 பயனாளிகள் தேர்வு செய்து 100 சதவீத மானியமாக 1,350 ரூபாயும் வழங்கப்பட உள்ளது.

தெளிப்பு நீர் பாசனக் கருவி வழங்குதல் திட்டத்தில் 30 சிறுகுறு விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, நூறு சதவீத மானியமாக 25 ஆயிரம் ரூபாயும், மற்றவர்கள் பிரிவில் 40 பேர் தேர்வு செய்யப்பட்டு 75 சதவீத மானியமாக 18,750 ரூபாயும் வழங்கப்பட உள்ளது.

புல்வெட்டும் கருவிகள் வழங்குதல் திட்டத்தில் 90 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, 50 சதவீத மானியமாக 12,500 ரூபாயும் வழங்கப்படும்.

புல் நறுக்கும் கருவி வழங்குதல் திட்டத்தின் கீழ், கையால் இயக்குவது பிரிவில் 40 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு 75 சதவீத மானியமாக 6,375 ரூபாயும், மின்சக்தியால் இயக்குவது பிரிவில் 120 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, 75 சதவீத மானியமாக 11,250 ரூபாயும் வழங்கப்படும்.

ஊறுகாய் புல் தயாரித்தல் திட்டத்தில் 15 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, நூறு சதவீத மானியத்தில் ரூ. 30 ஆயிரம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்களில் பயன்பெற விரும்பும் விவசாயிகள், தங்கள் பகுதி கால்நடை உதவி மருத்துவர் மற்றும் விவசாய அலுவலரைத் தொடர்பு கொண்டு விண்ணப்பித்து பயனடைய வேண்டும் என, மாவட்ட ஆட்சியர் கு. நாகராஜன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வேளாண்மை கணக்கெடுப்பு பயிற்சி வகுப்பு**

First Published : 14 Nov 2011 01:27:36 PM IST

ஸ்ரீவைகுண்டம், நவ.13:÷அகில இந்திய அளவில் நடத்தப்படும் 9-வது வேளாண்மை கணக்கெடுப்பு குறித்த பயிற்சி வகுப்பு ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

÷வேளாண்மை கணக்கெடுப்பு அலுவலர் வட்டாட்சியர் நயினார் பிள்ளை தலைமை வகித்தார்.

÷தூத்துக்குடி மாவட்ட புள்ளியியல் உதவி இயக்குநர் முருகன், வட்டார புள்ளியியல் ஆய்வாளர்கள் ராமசாமி, இருங்கோளபிள்ளை ஆகியோர் விளக்கமளித்தனர்.

÷தலைமை இடத்து துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் கிராமநிர்வாக அலுவலர்கள் உள்ளிட்டோர் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

சாத்தான்குளம்: சாத்தான்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 9-வது வேளாண்மை கணக்கெடுப்பு பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

வட்டாட்சியர் செ.சங்கரநாராயணன் தலைமை வகித்தார். தூத்துக்குடி கோட்ட புள்ளியியல் அலுவலர் ஆ.சண்முகம் பயிற்சி அளித்தார்.

வட்டார புள்ளியியல் அலுவலர் ப.பேச்சியம்மாள், வருவாய் ஆய்வாளர் நிகேதா பிரபாவதி, கிராம நிர்வாக அலுவலர்கள் ஜெயபால், முருகன், ராமகிருஷ்ணன், மணிகண்டன் உள்பட பலர் கலந்து கொண்டனர். பள்ளக்குறிச்சி வருவாய் ஆய்வாளர் விஜயகுமாரி நன்றி கூறினார்.

**பண்ணைப் பள்ளி பயிற்சி**

First Published : 14 Nov 2011 12:55:59 PM IST

பெரம்பலூர் நவ. 13: பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அருகேயுள்ள அனுக்கூர் கிராமத்தில் மக்கா சோளப் பயிரில் பண்ணைப் பள்ளி பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பெரம்பலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் செ. சிவக்குமார் பரிந்துரையின்படி, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் சார்பில் நடைபெற்ற இந்த முகாமில் 25 விவசாயிகளுக்கு மக்காச்சோளத்தில் உர நிர்வாகம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும், எந்த நேரத்தில் உரம் இடுவது, என்ன அளவு உரம் இடுவது, மண் ஆய்வுப்படி உரமிடுதல், உரங்களை ஐந்து வகைகளாகப் பிரித்து மேலுரமாக இடுவது, அதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் குறித்து விளக்கப்பட்டது.

குறிப்பாக, கால்நடைகளைப் பராமரித்து, அவைகளிடமிருந்து கிடைக்கக்கூடிய தொழு உரத்தை, ஊட்டமேற்றிய தொழு உரமாக மாற்றி நிலத்துக்கு இடுவது, இனி வரும் காலங்களில் ரசாயண உரங்களின் தேவையை சரியான அளவில் பயன்படுத்துவது, அதிகளவு ரசாயண உரமிடுவதால் நிலத்தில் ஏற்படக்கூடிய சீர்கேடுகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. தொடர்ந்து, விதை நேர்த்தி செய்தல் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. முகாமில் வேப்பந்தட்டை வேளாண் உதவி அலுவலர் மாரிதேவன், தொழில்நுட்ப வல்லுநர் (வேளாண் விரிவாக்கம்) க. மணிகண்டன், அனுக்கூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**உரங்கள் தட்டுப்பாடு: போராட்ட அறிவிப்பு**

First Published : 14 Nov 2011 12:55:41 PM IST

அரியலூர், நவ. 13: அரியலூர் மாவட்டத்தில் உரங்களின் தட்டுப்பாட்டை போக்கவில்லை எனில், மாவட்ட அளவில் போராட்டம் நடத்தப்படும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தச் சங்கத்தின் மாவட்டச் செயலர் உலகநாதன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அரியலூர் மாவட்டத்தில் தற்போது விவசாயிகள் நெல் நடவு செய்து, விவசாயப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில், விவசாயிகளுக்குத் தேவைப்படும் பொட்டாஷ், டி.ஏ.பி., யூரியா போன்ற உரங்கள் போதியளவில் கிடைப்பதில்லை.

மாவட்டத்தில் இயங்கி வரும் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் குறிப்பிட்ட அளவிற்கு உரங்கள் இல்லை. இதனால், விவசாயிகள் அரசு நிர்ணயிக்கும் விலையைக் காட்டிலும், ரூ. 280 வரை கூடுதல் விலை கொடுத்து தனியார் உரக் கடைகளில் உரங்களை வாங்க வேண்டிய நிலை உள்ளது.

ஏற்கெனவே, பருமழை பொய்த்ததால் விவசாயிகள் உரிய சாகுபடியை செய்ய முடியாமல் அவதிப்பட்ட நிலையில், தற்போது உரங்களின் தட்டுப்பாடின் காரணமாக மேலும் அவதிப்பட்டு வருகின்றனர்.

அரியலூர் மாவட்டத்தில் போதிய அளவிற்கு உரங்கள் இல்லாததால், விவசாயிகள் தஞ்சாவூர், கடலூர் மாவட்டங்களுக்குச் சென்று உரங்களை வாங்கி வர வேண்டிய நிலை உள்ளது.

எனவே, மாவட்ட நிர்வாகம் இந்த பிரச்னையில் உடனடியாக தலையீட்டு, போதிய அளவு உரத்தை பெற்று, தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளுக்கு அளித்து விவசாயிகளுக்கு தட்டுப்பாடில்லாமல் உரங்களை விநியோகம் செய்ய வேண்டும்.

இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், தமிழ்நாடு விவசாயிகள் சங்கமும் இணைந்து உரத் தட்டுப்பாட்ட நீக்க வலியுறுத்தி, மாவட்டம் தழுவிய போராட்டத்தை நடத்தும் என்றார் அவர்.

**இலவச கறவை மாடு, ஆடு: கிராம அளவிலான குழுக்களுக்குப் பயிற்சி**

First Published : 14 Nov 2011 12:11:41 PM IST

சிவகங்கை, நவ. 13: இலவச கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டத்துக்கான பயனாளிகளைத் தேர்வு செய்யும் கிராம அளவிலான குழுவினருக்கான பயிற்சி நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் வே.ராஜாராமன் தலைமை வகித்தார். இக் கூட்டத்தில், பயனாளிகளைத் தேர்வு செய்வதற்கான வழிகாட்டு முறைகள் பற்றி சிவகங்கை மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் எஸ். பாலகிருஷ்ணன் விரிவாக எடுத்துரைத்தார். இம் மாதம் 10 மற்றும் 17-ம் தேதிகளில் நடைபெறவுள்ள கிராம சபை மற்றும் சிறப்பு கிராம சபையின் முக்கியத்துவம் குறித்து உதவி இயக்குநர் (பஞ்சாயத்து) டாக்டர் மணி எடுத்துரைத்தார். இப் பயிற்சியில் ஆராவயல், எழுவன்கோட்டை, கண்டதேவி, அனுமந்தக்குடி, அம்பைகுடி, அரியக்குடி, இலந்தைக்குளம், சீவலாதி மற்றும் அரண்மனைக்கரை கிராம கமிட்டி குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், சிவகங்கை கோட்ட உதவி இயக்குநர் (கால்நடைப் பராமரிப்பு) டாக்டர் எம்.ஜே. முத்தையா, காரைக்குடி கோட்ட உதவி இயக்குநர் (கால்நடைப் பராமரிப்பு) டாக்டர் ஆர்.விஸ்வநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**உழவர் பாதுகாப்பு அட்டை அளிப்பு**

First Published : 14 Nov 2011 01:06:15 PM IST

கும்பகோணம், நவ. 13: கும்பகோணம் வட்டம், வலையப்பேட்டை ஊராட்சியைச் சேர்ந்த பயனாளிகளுக்கு உழவர் பாதுகாப்பு அட்டைகள் சனிக்கிழமை வழங்கப்பட்டன.

கும்பகோணம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு சமூக பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியர் பன்னீர்செல்வம் தலைமை வகித்தார்.

கும்பகோணம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் கோவி. மகாலிங்கம், ஒன்றியக் குழு துணைத் தலைவர் அழகு.த. சின்னையன் ஆகியோர் முன்னிலை வகித்து, வலையப்பேட்டை ஊராட்சியைச்

சேர்ந்த பெண்கள் உள்ளிட்ட 18 பேருக்கு உழவர் பாதுகாப்பு அட்டையை வழங்கி, நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தனர்.

தொடர்ந்து, அதே ஊராட்சியைச் சேர்ந்த 800 பேருக்கு உழவர் பாதுகாப்பு அட்டைகளை அதிகாரிகள் வழங்கினர்.

நிகழ்ச்சியில் தொகுதி இணைச் செயலர் என்.ஆர்.வி.எஸ். செந்தில், ஒன்றிய அவைத் தலைவர் கோ. ராஜேந்திரன், அதிமுக நிர்வாகி எஸ். மாயாண்டி, ஒன்றியக் குழு உறுப்பினர்கள் டி.கே. ராஜா, செல்லதம்பி, வலையப்பேட்டை ஊராட்சித் தலைவர் சரஸ்வதி தர்மராஜன், பதினோருவேலி இளங்கோவன், தில்லையம்பூர் ரவிச்சந்திரன், சாமிநாதன், வார்டு உறுப்பினர் எஸ்.எஸ். சண்முகம், துணை வட்டாட்சியர் உஷா, வருவாய் ஆய்வர் வெங்கடாசலம், கிராம நிர்வாக அலுவலர் பாரதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தேயிலை பயிர் சாகுபடி பயிற்சி முகாம் தொடக்கம்**

First Published : 14 Nov 2011 10:06:08 AM IST

உதகை, நவ. 13: உதகை உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில் தேயிலை பயிர் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் இம்மாதத்தில் 4 நாட்களுக்கு நடத்தப்படுவதாக தோட்டக்கலை உதவி இயக்குநர் வி.குணசேகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது: உதகை உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில் தேயிலை பயிர் சாகுபடி குறித்த பயிற்சி முகாம்கள் நவ.14-ல் கூடலூரில் தேன்வயல் பகுதியிலும், 16ம் தேதி உதகையில் சோலூர் ஒசஹட்டி பகுதியிலும், 23ம் தேதி குன்னூரில் காரக்கொரை பகுதியிலும், 24ம் தேதி கோத்தகிரியில் கீழ்கோத்தகிரி பக்காடா பகுதியிலும் நடைபெறுவதாக தெரிவித்துள்ளார்.

**மரக்கன்றுகள் நடும் விழா**

First Published : 14 Nov 2011 02:18:41 PM IST

குடியாத்தம், நவ. 13: குடியாத்தத்தை அடுத்த லிங்குன்றம் கிராமத்தில் உள்ள தனியார் ஷூ கம்பெனியும், ரோட்டரி சங்கமும் இணைந்து 1,900 மரக்கன்றுகள் நடும் விழா அண்மையில் நடத்தின.

ஷூ கம்பெனி நிர்வாகிகள் எஸ்.கோவர்தனன், மகேஷ்குமார், அரிகிருஷ்ணன், வெங்கடேசன் ஆகியோர் வழங்கிய ரூ. 50 ஆயிரம் மதிப்புள்ள இலவச மரக்கன்றுகள் நடப்பட்டன.

ரோட்டரி சங்கத் தலைவர் என்.மோகன், நிர்வாகிகள் என்.சத்தியமூர்த்தி, டி.என்.ராஜேந்திரன், கே.குணசேகரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**நாட்டின் அக்டோபர் மாத பணவீக்கம் 9.73% ஆக உயர்வு**

நவம்பர் 14,2011,12:14



புதுடில்லி : அக்டோபர் மாதத்தில் நாட்டின் பணவீக்கம் 9.73 சதவீதமாக அதிகரித்துள்ளது. செப்டம்பர் மாதத்தில் பணவீக்கம் 9.72 சதவீதமாக இருந்தது. உணவு பொருட்கள், பெட்ரோல் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் சமானிய மக்களை பெரும் அவதிக்கு ஆளாகி இருப்பதே பணவீக்க உயர்விற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆண்டு அடிப்படையில் அக்டோபர் மாதத்தில் உணவு பொருட்களின் விலை 11.06 சதவீதமும், காய்கறிகளின் விலை 21.76 சதவீதமும், பழங்களின் விலை 11.96 சதவீதமும், பால் விலை 11.12 சதவீதமும், முட்டை, இறைச்சி, மீன் ஆகியவற்றின் விலை 12.59 சதவீதமும் அதிகரித்துள்ளது.

**தேனி அயிரை மீன்களுக்குசென்னையில் கிராக்கி**

நவம்பர் 14,2011,12:54



தேனி:தேனி மாவட்டத்தில் போடி, பெரியகுளம், சின்னமனூர், வாய்க்கால்பட்டி, காமயகவுண்டன்பட்டி, ராயப்பன்பட்டி, கம்பம், கூடலூர், லோயர்கேம்ப் உட்பட பல பகுதிகளில், அயிரை மீன்கள் அதிகளவில் உற்பத்தியாகின்றன. வியாபாரிகள் இதை வாங்கி சென்னை, பெங்களூரு போன்ற நகரங்களுக்கு அனுப்புகின்றனர்.தேனி மாவட்டத்தில் இம்மீன், கிலோ 300 ரூபாய்க்கு மேல் விற்கப்படுகிறது. சென்னையில் இன்னும் அதிக விலை கிடைக்கிறது. இதனால், மீன் பிடிப்பவர்களுக்கும், விற்பனை செய்பவர்களுக்கும் லாபம் கிடைக்கிறது.அயிரை மீன்களை வளர்ப்பது குறித்த தொழில்நுட்பத்தை, மீன்வளத்துறை அளித்தால், எந்த காலத்திலும் மீன் வளர்த்து லாபம் பெற முடியும் என, விவசாயிகள் தெரிவித்தனர்.

**ரூ.3 கோடி மதிப்புதேயிலைத் தூள் தேக்கம்**

நவம்பர் 14,2011,14:47




குன்னூர்:தேயிலை வர்த்தகத்தில், உள்நாட்டு வர்த்தகர்களிடையே ஆர்வம் குறைந்ததால், குன்னூர் தேயிலை ஏலத்தில், 3 கோடி ரூபாய் மதிப்புள்ள தேயிலைத் தூள் தேங்கியது.குன்னூர் தேயிலை ஏல மையத்தில், விற்பனை எண் 45க்கான ஏலம், இரு நாட்களுக்கு முன் நடந்தது. 12.73

லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு இருந்தது. உள்நாட்டு வர்த்தகம் களை கட்டாததால், விற்பனைக்கு வந்த தேயிலைத் தூளில், 3.70 கோடி ரூபாய் மதிப்புள்ள தூள் தேங்கியது.

**பயிரில் களை எடுக்க இயந்திரம் பயன்பாடு அதிகரிப்பு: கூலியாட்கள் பற்றாக்குறை போக்க நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 15,2011,02:05 IST

கருத்தை பதிவு செய்ய

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், கூலி ஆட்கள் பற்றாக்குறையை போக்கும் வகையில் நடவு, களை எடுக்க என இயந்திரங்களை பயன்படுத்த துவங்கியுள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் விவசாயத்தை முக்கிய தொழிலாக கொண்ட பகுதியாக கோபி மற்றும் சுற்றுவட்டார பகுதிகள் உள்ளது. பவானிசாகர் அணையின் மூலம் தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசன பகுதிகள், எல்.பி.பி., வாய்க்கால் மூலம் பயன்பெறும் பாசன பகுதிகள் என சுமார் 2.5 லட்சம் ஏக்கரில் விவசாய பணிகள் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படுகிறது. நெல், கரும்பு, மஞ்சள், மரவள்ளி, மானாவாரி பயிர்கள், பயறு வகைகள் என ஆண்டுக்கு இருபோகம் சாகுபடி செய்யப்படுகிறது.

விவசாய கூலி ஆட்கள் பற்றாகுறையால் விவசாயப் பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது ஆண்களுக்கு 300 ரூபாய், பெண்களுக்கு 150 ரூபாய் வரை கூலி கொடுத்தும் ஆட்கள் கிடைக்கவில்லை. உரம் விலையும் இரு மடங்களாக உயர்ந்துள்ளது. 400 முதல் 450 ரூபாய்க்கு விற்கப்பட்ட டி.ஏ.பி., 900 ரூபாய் வரையும், 200 ரூபாய்க்கு விற்கப்பட்ட யூரியா 700 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. கூலியாட்கள் பற்றாக்குறை, உரங்கள் விலை உயர்வு போன்றவற்றால் நாளுக்கு நாள் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். நெல் பயிரிடும் விவசாயிகள், சென்ற சில ஆண்டுகளுக்கு முன் நெல் நடவு மற்றும் களை எடுக்க கோனா வீடர் கருவிகளை பயன்படுத்தினர். இக்கருவியால் பெரிய அளவில் பயன் இல்லாததால் மீண்டும் கூலியாட்களை நம்பியே விவசாயிகள் உள்ளனர். அறுவடைக்கு மட்டும் இயந்திரங்களை பயன்படுத்தி வருகின்றனர். ஈரோடு மாவட்டத்தில் முக்கிய பயிர்களின் ஒன்றான வாழை, மஞ்சள் பயிரில் களை எடுக்க இயந்திரங்கள் பயன்படுத்த துவங்கி உள்ளனர். தற்போது மஞ்சள் அறுவடை சீஸனிலும், வாழை பயிரிடும் சீஸனிலும் உள்ளன.

பங்களாபுதூர், கள்ளிப்பட்டி, டி.என்.பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் வாழை பயிரிட்டு, ஓரளவுக்கு வளர்ந்துள்ளது. சென்ற சில நாட்களுக்கு முன் கோபி பகுதியில் பெய்த பலத்த மழை காரணமாக வாழை பயிரில் களை நன்கு வளர்ந்து காணப்படுகிறது. களை அப்புறப்படுத்தவில்லை என்றால் வாழையின் மகசூல் பாதிக்கப்படும். இதனால், இயந்திரங்கள் மூலம் வாழையில் களை எடுக்கும் பணி நடக்கிறது. வாழை நடவு சீஸன் என்பதால் வாழை கன்று எடுக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வாழை விவசாயி ஒருவர் கூறியதாவது: சென்ற ஐந்தாண்டுகளாக விவசாயத்துக்கு தேவையான கூலியாட்கள் கிடைக்கவில்லை. பனியன் கம்பெனி நாளுக்கு நாள் பெருகி வருவதால், இளைய தலைமுறையினர் கம்பெனிக்கு செல்கின்றனர். வயதானவர்கள், ஏற்கனவே விவசாயப் பணியில் ஈடுபட்டவர்கள் மட்டும் விவசாய வேலைக்கு வருகின்றனர். நாளுக்கு நாள் கூலி ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது. இதை போக்கும் வகையில் வாழை பயிரில் களை எடுக்கும் மினி டிராக்டர் பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் வாழையில் உள்ள களையை சுத்தமாக எடுத்து விடலாம். மஞ்சள் அறுவடையும் பணியும் செய்ய முடியும். விவசாய ஆட்கள் பற்றாக்குறை, உரம் விலை உயர்வு என விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இக்கருவி விவசாயிகளுக்கு பயனுள்ளதாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகளுக்கு எண்ணெய் வித்து பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 15,2011,01:29 IST

கருத்தை பதிவு செய்ய

பொள்ளாச்சி : பொள்ளாச்சி அடுத்த தேவம்பாடி கிராமத்தில் வடக்கு ஒன்றிய வேளாண் துறை சார்பில் தேவம்பாடி கிராமத்தில் விவசாயிகளுக்கு எண்ணெய் வித்துக்கள் பயிர் சம்பந்தமாக சிறப்பு பயிற்சி நடந்தது. ஆத்மா திட்ட தலைவர் சக்திவேல் தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர் லட்சுமி முன்னிலை வகித்தார். முகாமில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஆழியாறு வேளாண்மை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் நெல்சன் தவமணி, வேளாண்மை உதவி இயக்குனர் உமாராமணி, வேளாண்மை அலுவலர் விஸ்வநாதன், துணை வேளாண்மை அலுவலர் முத்துகிருஷ்ணன் ஆகியோர் பேசினர். பார்த்தீனியம் ஒழிப்பு: தேவம்பாடி கிராமத்தில் தேவம்பாடி வேளாண் துறை சார்பில் பார்த்தீனியம் விஷச்செடியை

ஒழிக்கும் முகாம் நடந்தது. வடக்கு ஒன்றிய திட்ட தலைவர் சக்திவேல் தலைமை வகித்தார். தேவம்பாடி ஊராட்சி தலைவர் லட்சுமி முன்னிலை வகித்தார். விவசாயிகள் பங்களிப்புடன் கிராமத்தில் இருந்த பார்த்தீனிய செடிகள் அழிக்கப்பட்டன. வடக்கு ஒன்றிய உதவி வேளாண்மை இயக்குனர் உமாராணி, வேளாண்மை அலுவலர் விஸ்வநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். இரண்டு நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் ஷேக்அமீர், சுந்தரராஜ், ராமகிருஷ்ணன், சக்திவேல் ஆகியோர் செய்திருந்தனர்.

**விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல் தனியார் உரக்கடை விலையை அரசு கட்டுப்படுத்த வேண்டும்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 15,2011,01:43 IST

கருத்தை பதிவு செய்ய

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய நிர்வாக குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் தமிழ்நாடு விவசாயிகள் ஒன்றிய செயலாளர் பாண்டியன் தலைமையில் நடந்தது. இதில் எம்.எல்.ஏ., உலகநாதன், மாநில துணை செயலாளர் பழனிசாமி, மாவட்ட செயலாளர் வீரசேனன், விவசாய தொழிலாளர் சங்க மாநில செயலாளர் முத்தரசன், ஒன்றிய செயலாளர் வக்கீல் வையாபுரி உட்பட பலர் பங்கேற்றனர். கூட்டத்தில், கடந்த ஆண்டு பயிர் இன்சூரன்ஸ் தொகை விவசாயிகளுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். தனியார் உரக்கடையில் அரசு நிரணயித்த விலையை விட கூடுதல் விலை விற்பனை செய்யப்படுவதை கட்டுப்படுத்த வேண்டும். விவசாயிகளுக்கு பொட்டாஷ் உரம் தட்டுபாடு இல்லாமல் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிராம பஞ்சாயத்துகளுக்கு கடந்து ஏழு மாதமாக நிதி ஏதும் ஒதுக்காததால் மின்சாரம், மற்றும் குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்ய, புதிதாக பொறுப்பேற்றுள்ள பஞ்சாயத்து நிர்வாகம் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளது. எனவே, கிராம பஞ்சாயத்துக்கு அரசு நிதியை உடனே ஒதுக்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**பருவமழையால் குளங்கள் நிரம்பின: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 15,2011,01:28 IST

கருத்தை பதிவு செய்ய

பெ.நா.பாளையம் : பெரியநாயக்கன்பாளையம், துடியலூர் வட்டாரத்தில் பருவமழையால் குளங்கள் நிரம்பியதால், கிணற்றில் நீர்மட்டம் உயர்ந்தது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி

அடைந்துள்ளனர். பருவமழையால் சின்னதடாகம், துடியலூர், வெள்ளக்கிணறு, பெரியநாயக்கன்பாளையம் உள்ளிட்ட பகுதியில் உள்ள குளங்கள் நிரம்பி உள்ளன. சின்னதடாகம் பெரிய பள்ளத்தில் பெருகிய மழை நீரால் சோமையம்பாளையம் தடுப்பணை நிரம்பியது. அதனுடன் இணைந்த கணுவாய் தடுப்பணையும் நிரம்பி வழிகிறது. இதிலிருந்து வெளியேறிய நீரின் ஒரு பகுதி வெள்ளக்கிணறு குளத்துக்கு சென்றது. தற்போது வெள்ளக்கிணறு குளம் நிரம்பி உள்ளது. இங்குள்ள கிணறுகளிலும் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால், காய்கறி பயிர்செய்யும் விவசாயிகள் சீரான அளவில் காய்கறிகளுக்கு தேவையான தண்ணீரை பாய்ச்ச முடியும் என, நம்பிக்கை தெரிவித்தனர். பருவமழை குறித்து சோமையம்பாளையம், பன்னிமடை, குப்பநாயக்கன்பாளையம், அப்பநாயக்கன்பாளையம், பழனிக்கவுண்டன்புதூர், திப்பனூர், தாளியூர் கிராம விவசாயிகள் கூறுகையில்,"" கடந்த 2 மாதங்களுக்கு முன் விதைக்கப்பட்ட சோளப்பயிர்களுக்கு இந்த மழை பயன் அளிக்கும். நன்கு விளையும் சோளப்பயிர்களால் கால்நடைகளுக்கு போதுமான பச்சை தீவனம் கிடைக்கும்," என்றனர்.

ஊராட்சிகளுக்கான ஆழ்குழாய் கிணறுகளிலும் நீர்மட்டம் உயர்ந்தள்ளது. பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்தில் நாயக்கன்பாளையம், பிளிச்சி, அசோகபுரம், குருடம்பாளையம், பன்னிமடை, சோமையம்பாளையம், நஞ்சுண்டாபுரம், சின்னதடாகம், வீரபாண்டி ஊராட்சிகளும், பெரியநாயக்கன்பாளையம், நரசிம்மநாயக்கன்பாளையம், துடியலூர், கூடலூர், எண்.4 வீரபாண்டி உள்ளிட்ட பேரூராட்சிகளும் உள்ளன. பில்லூர் குடிநீர் திட்டத்தில் இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு சப்ளை செய்யப்படும் குடிநீர் போதுமானதாக இல்லை. ஒவ்வொரு ஊராட்சி மற்றும் பேரூராட்சியில் வசிப்பவர்களுக்கு 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே பில்லூர் குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது. தற்போது பெய்த பருவ மழையால் உள்ளாட்சி நிர்வாகங்களுக்கு சொந்தமான கிணறு மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால், பொதுமக்களுக்கு பில்லூர் குடிநீருடன் ஆழ்குழாய் நீரும் ஓரளவு வினியோகம் செய்ய முடியும். இன்னும் 3 மாதங்களுக்கு குறையாமல் குடிநீர் பிரச்னையை சமாளிக்க முடியும் என, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றிய உள்ளாட்சி நிர்வாகத்தினர் நம்பிக்கையாக உள்ளனர்.

**விதை சான்று துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 15,2011,01:33 IST

கருத்தை பதிவு செய்ய

உடுமலை : சின்ன வெங்காய சாகுபடியில் போதுமான விளைச்சல் பெற விதை தேர்வில் விவசாயிகள் போதுமான கவனம் செலுத்த வேண்டும் என விதை சான்று துறை வலியுறுத்தியுள்ளது. விதை சான்று துறை துணை இயக்குனர் பொன்னுசாமி நடேசன் அறிக்கை: உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் வடகிழக்கு பருவமழை பெய்துள்ளதையடுத்து சின்ன வெங்காயம் விதைப்பு பணிகளை விவசாயிகள் துவக்கியுள்ளனர். விவசாயிகள், விற்பனை உரிமம் பெற்ற விற்பனை நிலையங்களில் விற்பனை பட்டியலுடன் விதைகளை வாங்க வேண்டும். விதைகள் அதற்குரிய விதை பாக்கெட்டுகளில் விவர அட்டையும் இருக்க வேண்டும். விவர அட்டையில், வெங்காய விதையின் குவியல் எண், காலாவதி தேதி ஆகியவற்றை கவனித்து வாங்க வேண்டும். காலாவதி தேதிக்கு பின்னர் விதைகளை உபயோகிக்க கூடாது. விதை விற்பனை உரிமம் இல்லாமல் வெளியூரில் சென்று விவர அட்டையில்லாத விதை பாக்கெட்டுகளை வாங்கி வந்து விற்பனை செய்வது சட்டப்படி குற்றமாகும். இத்தகைய விற்பனையில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். விவர அட்டை இல்லாத விதைகளின் நம்பகத்தன்மை கேள்விக்குரியதாகும். எனவே இவ்வகை விதைகளை விவசாயிகள் பயன்படுத்தக் கூடாது என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"பசுமை வீடுகள் திட்டம்' துவக்க விழா தாமதமாகும் பின்னணி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2011,23:06 IST

கருத்தை பதிவு செய்ய

காஞ்சிபுரம் : தமிழக அரசு புதிதாக அறிவித்துள்ள, "பசுமை வீடுகள்' திட்டத்தின் கீழ், காஞ்சிபுரத்தில் ஏழு மாதிரி வீடுகள் கட்டப்படுகின்றன. இவ்வீடுகளின் தரத்தைக் கண்டறிய, தொழில்நுட்ப கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. அக்கமிட்டி, மாதிரி வீடுகளைப் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்காததால், திட்டம் துவக்க விழா மற்றும் மாதிரி வீடுகள் திறப்பு விழா தேதி, முடிவு செய்யப்படாமல் உள்ளது. தமிழகத்தில், கடந்த தி.மு.க., ஆட்சியின் போது ஊராட்சிப் பகுதிகளில், வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு, குடிசை வீடுகளை கான்கிரீட் வீடுகளாக மாற்ற, கலைஞர் வீட்டு வசதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், ஒரு வீட்டிற்கு 75 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. அ.தி.மு.க., ஆட்சிக்கு வந்ததும், புதிய அரசு கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தை நிறுத்தியது.

கட்டுமானச் செலவு, இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகரித்துள்ள நிலையில், வீடு கட்ட வழங்கப்படும் 75 ஆயிரம் ரூபாய், மிகவும் குறைவாக உள்ளது. எனவே, கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தை கைவிடுவதாகவும், அதற்கு மாற்றாக, கிராமப்புற ஏழைகள் பயன்பெறும் வகையில், "சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்' துவக்கப்படும் என, தமிழக அரசு அறிவித்தது. இத்திட்டத்தின் கீழ், 300 சதுர அடி பரப்பளவில், ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பில் வீடு கட்டப்பட உள்ளது. ஊரகப் பகுதிகளில், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில், சூரிய ஒளி மின் சக்தியுடன் கூடிய, பசுமை வீடுகள் கட்டித் தருவதே, திட்டத்தின் நோக்கம். நடப்பு நிதியாண்டில், 60 ஆயிரம் பசுமை வீடுகள் கட்ட, அரசு 1,080 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது.

"பசுமை வீடுகள்' எப்படி இருக்கும் என்பதை மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக, காஞ்சிபுரம் அடுத்த பாலுசெட்டிசத்திரத்தில், சென்னை-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில், ஏழு மாதிரி பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இவ்வீடுகள் திறப்பு விழா மற்றும் பசுமை வீடுகள் திட்டம் துவக்க விழா, இம்மாதம் துவக்கத்தில் நடைபெறுவதாக இருந்தது. முதல்வர் கலந்து கொள்ள இருந்ததால், மாதிரி பசுமை வீடுகள் கட்டப்பட்ட பகுதியில், பிரமாண்டமான பந்தல் அமைக்கப்பட்டது. ஆனால், விழா தேதி இன்னமும் முடிவாகவில்லை. மாதிரி வீடுகளை யாரும் பார்க்க முடியாத அளவிற்கு, அவற்றைச் சுற்றி தடுப்பு அமைக்கப்பட்டுள்ளது. தனியார் செக்யூரிட்டிகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது. பந்தல் அமைக்கப்பட்ட பிறகு, விழா தள்ளிப் போவதற்கான காரணம் குறித்து, பெயர் வெளியிட விரும்பாத அதிகாரிகள் கூறியதாவது:

பசுமை வீடுகள், ஜெர்மன் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி அமைக்கப்பட உள்ளன. முதல் கட்டமாக, மாதிரி வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வீடுகளில், தரை தளம் அமைப்பதற்கு மட்டும் சிமென்ட், கற்கள் பயன்படுத்தப்பட்டன. அதன் மேல், பைபரில் வடிவமைக்கப்பட்ட, சுவர், மேற்கூரை போன்றவை பொருத்தப்படுகின்றன. இவ்வீடுகள் அதிகபட்சமாக, 80 டிகிரி செல்சியஸ் வெப்பத்தையும், மைனஸ் 30 டிகிரியையும் தாங்கும் திறன் கொண்டவை. நிலநடுக்கத்தைத் தாங்கும். எடை குறைவு என்பதால், கீழே சரிந்தாலும், யாருக்கும் ஆபத்து ஏற்படாது. நீர் உள்ளே புகாது; விரிசல் ஏற்படாது; அதிக காலம் தாங்கும் திறன் கொண்டது. மின் இணைப்புகள் வெளியில் தெரியாத அளவிற்கு, வீடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தனியார் நிறுவனம் மூலம், மாதிரி வீடுகள் அமைக்கப்படுகின்றன. அவர்கள் வீட்டின் அருகில், யாரையும் அனுமதிப்பதில்லை. எனவே, வீடு கட்ட பயன்படுத்தும் மூலப் பொருட்கள் குறித்த முழு விவரம் தெரியவில்லை.

வெளிநாடுகளில், இதுபோன்ற வீடுகள் அதிக அளவில் கட்டப்பட்டுள்ளன. நம் நாட்டில் முதன் முறையாக கட்டப்படுகின்றன. இவை, நம் நாட்டின் சூழலுக்கு ஏற்றதாக இருக்குமா, நம் மக்கள் முறையாக பயன்படுத்த முடியுமா, என்பதை அறிவதற்காக, பொதுப்பணித் துறை முதன்மைப் பொறியாளர் தலைமையில், தொழில் நுட்ப கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. இக்கமிட்டி ஆய்வு செய்து தரும் அறிக்கையைப் பார்த்த பின், திட்டம் துவக்க விழாவை வைத்துக் கொள்ளலாம் என, முதல்வர் தெரிவித்துள்ளார். கமிட்டி இன்னமும் ஆய்வு மேற்கொள்ளவில்லை. மாதிரி வீடுகளுக்கு வண்ணம் பூசும் பணி தற்போது நடந்து வருகிறது. அவற்றில் சோலார் மின் விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன. கமிட்டி ஆய்வு முடிந்த பின்னரே, பசுமை வீடுகள் திட்டம் துவக்க விழா மற்றும் மாதிரி பசுமை வீடுகள் திறப்பு விழா தேதி முடிவாகும். இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மயிலத்தில் பயறு பெருக்குத் திட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2011,23:58 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம் : மயிலம் வேளாண்மை அலுவலகம் சார்பில் விவசாயிகளுக்கு உளுந்து விதை மற்றும் உரங்கள் வழங்கப்பட்டது. துரிதப்படுத்தப்பட்ட பயறு பெருக்கத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு உளுந்து விதை, கே.யூ.,3000 ரக உளுந்து விதை மினிகிட்டுகள், ஜிங் சல்பேட், பயறு நுண்ணுரம் மற்றும் சிப்சம் வழங்கப்பட்டது. மேலும் உளுந்து பயிருக்குத் தேவையான பாதுகாப்பு மருந்துகளும் வழங்கப்பட்டது. ஒன்றியத்தை சேர்ந்த ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விதைப்பு செய்ய விவசாயிகளுக்கு, இவற்றை ஒன்றிய சேர்மன் ராமமூர்த்தி வழங்கினார். வேளாண்மை உதவி இயக்குனர் வேலாயுதம், துணை வட்டார அலுவலர் பொன் னுசாமி, உதவி வேளாண் அலுவலர்கள் விமலா, மங்கையற்கரசி, மகாலட்சுமி உடனிருந்தனர்.

தினத் தந்தி

# உணவு பொருள்கள் விலை உயர்வால் அக்டோபரில், பொது பணவீக்கம் 9.73 சதவீதமாக அதிகரித்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி

உணவு தானியங்கள் மற்றும் எரிபொருள்கள் விலை உயர்வால், நடப்பு 2011–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பொது பணவீக்கம் 9.73 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 9.08 சதவீதமாகவும், முந்தைய செப்டம்பர் மாதத்தில் 9.72 சதவீதமாகவும் இருந்தது. தொடர்ந்து 11 மாதங்களாக பொது பணவீக்கம் 9 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

காய்கறி

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்தில், ஓர் ஆண்டு கால அடிப்படையில் காய்கறி மற்றும் பழங்கள் விலை முறையே 21.76 சதவீதம் மற்றும் 11.96 சதவீதம் உயர்ந்துள்ளது. பால் விலை 11.12 சதவீதம் அதிகரித்துள்ள நிலையில், முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 12.59 சதவீதம் உயர்ந்துள்ளது. இதனையடுத்து, செப்டம்பர் மாதத்தில் 9.23 சதவீதமாக இருந்த உணவு பணவீக்கம், அக்டோபரில் 11.06 சதவீதமாக உயர்ந்துள்ளது.

பொதுமக்கள் வருமானத்தில் பெரும் பகுதியை உணவு பொருள்களுக்காக செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், நுகர்வோர் சாதனங்கள் போன்றவற்றின் விற்பனை குறைந்து பொருளாதார வளர்ச்சி மேலும் குறைய வாய்ப்புள்ளது.

பெட்ரோல் விலை

கடந்த செப்டம்பர் மாதத்தில் பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல் விலையை லிட்டருக்கு ரூ.3 உயர்த்தின. பெட்ரோல் விலை தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருவதையடுத்து, செப்டம்பரில் 14.09 சதவீதமாக இருந்த எரிபொருள் மற்றும் எரிசக்தி பணவீக்கம் அக்டோபரில் 14.79 சதவீதமாக உயர்ந்துள்ளது.

தயாரிப்பு பொருள்கள்

பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 65 சதவீத பங்களிப்பை கொண்டுள்ள சமையல்

எண்ணெய், பருத்தி, ஜவுளி, சர்க்கரை, உருக்கு பொருள்கள் உள்ளிட்ட தயாரிப்பு பொருள்கள் பணவீக்கம் அக்டோபர் மாதத்தில் 7.66 சதவீதமாக உள்ளது. இது, செப்டம்பரில் 7.69 சதவீதமாக இருந்தது. இப்பணவீக்கம் சற்று குறைந்துள்ளது. இருப்பினும், இப்பணவீக்கம் இவ்வாண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து 6 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்ட உணவு சாரா பொருள் பணவீக்கம் செப்டம்பரில் 14.82 சதவீதமாக இருந்தது. இது, அக்டோபரில் 7.71 சதவீதமாக உள்ளது. இதே காலத்தில், முதன்மை பொருள்கள் பணவீக்கமும் 11.84 சதவீதத்திலிருந்து 11.40 சதவீதமாக குறைந்துள்ளது.

## ஏப்ரல்–ஆகஸ்டு மாத காலத்தில் மிளகு ஏற்றுமதி 12% உயர்ந்தது



பி கே கிருஷ்ணகுமார்,கொச்சி

ஏப்ரல்–ஆகஸ்டு மாத காலத்தில் நாட்டின் மிளகு ஏற்றுமதி 12 சதவீதம் அதிகரித்து 8,750 டன்னாக உயர்ந்துள்ளது. இதன் காரணமாக, மிளகு விவசாயிகளிடம் உள்ள கையிருப்பு மிகவும் குறைந்துள்ளது.

இந்தோனேஷியா, மலேஷியா, பிரேசில் மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் ஏற்றுமதி குறைந்தும், இந்தியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளின் ஏற்றுமதி அதிகரித்தும் உள்ளது. உற்பத்தி குறைவால், கடந்த சில மாதங்களாக மிளகின் விலை அதிகரித்து காணப்படுகிறது. அடுத்த ஆண்டும் இதே நிலை நீடிக்கும் என்று முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் நாட்டின் மிளகு உற்பத்தி இலக்கான 43,000 டன், கடந்த ஆண்டின் உற்பத்தியை விட 5000 டன் குறைவாகும். கேரள மாநிலத்தில் பெய்து வரும் கனமழை இந்த உற்பத்தி குறைவுக்கு காரணம் என தெரிகிறது.

உலகில் மிளகு உற்பத்தியில் முதலிடத்திலுள்ள வியட்நாமில் உற்பத்தி இலக்கு குறித்த தெளிவான தகவல்கள் இல்லாத நிலையில் உலக அளவிலும் நடப்பு ஆண்டின் மிளகு உற்பத்தி சுமார் 6,500 டன் குறைந்து 3.10 லட்சம் டன்னாக சரிவடையும்.

இந்தோனேஷியாவிலும் உற்பத்தி 25 சதவீதம் குறைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கேரளாவில் இஞ்சி விலை கடும் வீழ்ச்சி; விவசாயிகள் கவலை வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய கோரிக்கை

கோழிக்கோடு,நவ.15–

கேரளாவில் இஞ்சிக்கு போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் அவதிப்பட்டு

வருகிறார்கள். எனவே இஞ்சிகளை வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

இஞ்சி விவசாயம்

வயநாடு மாவட்டத்தை பொறுத்தவரை அங்குள்ள விவசாயிகள் இஞ்சி விவசாயம் செய்து வருகிறார்கள். கடந்த ஆண்டு 60 கிலோ எடையுள்ள இஞ்சி மூடை ரூ.1200 முதல் ரூ.1300 வரை விற்பனை ஆனது. ஆனால் இந்த ஆண்டு கடந்த 4 மாத காலமாக 60 கிலோ மூடை இஞ்சி 550 ரூபாய்க்கே விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு இஞ்சி அதிகளவு வரத்து காரணமாக தான் விலை குறைந்து உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். அதோடு தொடர் மழையின் காரணமாக அழுகிய நிலையில் அதிக அளவு இஞ்சிகள் வந்ததும் விலை குறைவுக்கு ஒரு காரணம் என்று அவர்கள் கூறினார்கள்.

ஏற்றுமதி செய்ய கோரிக்கை

இந்த ஆண்டு இஞ்சி வரத்துக்கு விவசாயிகள் தான் காரணம். ஏனெனில் கடந்த ஆண்டு 60 கிலோ மூடை இஞ்சிக்கு ரூ.1300 வரை விலை கிடைத்ததால் விவசாயிகள் அதிக லாபம் அடைந்தனர். இந்த ஆண்டும் இஞ்சிக்கு கூடுதல் விலை கிடைக்கும் என்ற ஆசையில் அனைத்து விவசாயிகளும் கூடுதலாக இஞ்சி பயிரிட்டனர்.

வாங்குவோர் சக்தி குறைவு, வரத்து அதிகம் என்ற காரணத்தால் தான் இஞ்சி விலை குறைவுக்கு காரணம் என்று வர்த்தக நிபுணர்கள் கருத்து தெரிவித்து உள்ளனர். இது தொடர்பாக வயநாட்டை சேர்ந்த விவசாயிகள் சிலர் கூறியதாவது:–

நாங்கள் வங்கிகளில் நிலத்தை அடமானம் வைத்து கடன் வாங்கி இஞ்சி பயிரிட்டு உள்ளோம். தொடர்ந்து விலை இல்லாததால் இஞ்சி பயிருக்கு செலவழித்த தொகையை திரும்ப பெற முடியவில்லை. மாறாக நஷ்டமே அடைந்து உள்ளோம். எனவே விவசாயிகளை பாதுகாக்கும் பொருட்டு இஞ்சிக்கு அரசு உரிய விலை நிர்ணயம் செய்ய வேண்டும். மேலும் வெளிமாநிலங்களுக்கு இஞ்சிகளை ஏற்றுமதி செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## அறுவடைக்கு பின் ஏற்படும் இழப்பை தவிர்க்க பழம்–காய்கறிகளில் ‘நானோபிலிம்’ தொழில்நுட்பம்

கோவை, நவ.15–

அறுவடைக்கு பின் ஏற்படும் இழப்பை சரிசெய்ய பழம் மற்றும் காய்கறிகளில் நானோபிலிம் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது என்று வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்தார்.

பயிற்சி முகாம்

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் நிதி உதவியுடன் நாட்டில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் உள்ள விஞ்ஞானிகளுக்கு ஊட்டச்சத்து–வளர்ச்சி ஊக்கிகளின் மாறுபாடு மற்றும் ஒளிச்சேர்க்கை திறன் என்ற தலைப்பில் 10 நாள் பயிற்சி முகாம் நடைபெற்று வருகிறது.

இதன் தொடக்க விழா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கலையரங்க கூடத்தில் நடந்தது. பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசப்பூபதி கலந்து கொண்டு பயிற்சி முகாமை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

பயிர்களின் உற்பத்தி திறன்

நாட்டில் தற்போது அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப பயிர்களின் உற்பத்தி திறனை

அதிகரிக்க வேண்டும். ஆனால் மண் மற்றும் உற்பத்தி சார்ந்த காரணிகளால் பெரும்பாலான பயிர்களின் உற்பத்தி திறன் உயராமல் சமநிலையில் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 32 மில்லியன் டன் ஊட்டச்சத்துகளான தழை, மணி மற்றும் சாம்பல் ஆகியவை மண்ணில் இருந்து பயிர்களால் எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் 24 மில்லியன் டன் ஊட்டச்சத்து மட்டுமே மண்ணில் இடப்படுகிறது. இதன் காரணமாக மண்ணின் தரம் குறைந்து உபயோகம் அற்ற மண்ணாக மாறிவிடும் சூழ்நிலை நிலவுகிறது.
எனவே ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திறனை அளிப்பதன் வாயிலாக பயிர்களின் உற்பத்தி திறனை அதிகரிக்கலாம். தற்போது நாட்டின் அனைத்து மண் வகைகளில் துத்தநாக மற்றும் கந்தக குறைபாடு காணப்படுகிறது. எனவே அனைத்து பயிர்களுக்கும் துத்தநாக சல்பேட்டை மண்ணில் இடுவதை உர பரிந்துரையில் சேர்க்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.
நானோபிலிம் தொழில்நுட்பம்
இதற்காக வேளாண் பல்கலைக்கழகம் பயிர்களின் சத்துகளை அதிகரிக்க பயிர் பூஸ்டர்களை கண்டுபிடித்து உள்ளது, குறிப்பாக வேர் மூலம் அளிக்கப்படும் தென்னை டானிக் தமிழகம் மற்றும் பிற மாநிலங்களில் அதிக பயன்பாட்டில் உள்ளன.
இதே போல் பயிறு ஒன்டர், பருத்தி பிளஸ், மக்காச்சோள மேக்சிம், கரும்பு சூப்பர் மற்றும் வாழை பூஸ்டர் ஆகியவற்றை அளிப்பதன் மூலம் பயிர் விளைச்சலை அதிகரிக்க முடியும்.
அறுவடைக்கு பின்னர் பழம் மற்றும் காய்கறிகளில் ஏற்படும் இழப்பை சரி செய்ய நானோ–பிலிம் தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இதன் வாயிலாக அவற்றின் ஆயுட்காலத்தை அதிகரிக்க முடியும். இந்த தொழில்நுட்பம் வாயிலாக களிமண் துகளிகளில் ஜியோலைட் இணைப்பதன் மூலம் உர பயன்பாட்டை 25 சதவீதம் அதிகரிக்க இயலும். இதன் மூலம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி ஆகும் நாப்தாவின் அளவை குறைத்து, இந்தியாவின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்.இவ்வாறு அவர் கூறினார்.

## கொலக்கம்பை பகுதிகளில் உறை பனி பொழிவால் தேயிலை செடிகள் கருகியது



கொலக்கம்பை பகுதியில் நிலவி வரும் கடும் உறை பனியால் தேயிலை செடிகள் கருகி உள்ளதை படத்தில் காணலாம்.

கொலக்கம்பை, நவ.15–
கொலக்கம்பை பகுதி யில் தற்போது பெய்து வரும் கடும் உறை பனி பொழிவால் தேயிலை செடிகள் கருகி வருகின் றன. இதனால் மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது.
மழை

*கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த வாரம் வரை பலத்த மழை பெய் தது. இடை விடாது 20 நாட்கள் கொட்டி தீர்த்த பலத்த மழை யினால் பல்வேறு இடங்களில் நிலச்சரிவு, மண்சரிவு போன்றவை ஏற்பட்டது.*

*மேலும் விவசாய நிலங்களில் வெள்ளம் புகுந்து, விவசாய பயிர்களும் பாதிக்கப்பட்டது. தொடர்ந்து பெய்த மழை யினால் தாழ்வான பகுதிகளில் மற்றும் நீரோடைகளில் உள்ள பகுதி களில் உள்ள தேயிலை தோட் டங்களில் மகசூல் குறைந்து காணப்பட்டது.*

*உறை பனி*

*இதனால் தேயிலையை நம்பி யுள்ள தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் பெரும் அவதிக்குள் ளாகி வந்த நிலை யில் கடந்த 4 நாட்களாக தட்பவெப்ப நிலை முற்றிலும் மாறுபட்டு பகல் நேரங்களில் சமவெளி பகுதிக்கு ஈடாக கடுமையான வெயிலும், இரவு நேரங்களில் உறைபனியும் கொட்டி வருகிறது.*

*இதனால் இப்பகுதி மக்கள் குளிரில் இருந்து பாதுகாத்து கொள்ள காலை 8 மணி வரை கம்பளி ஆடைகள், கையுறை கள் மற்றும் குல்லா போன்ற வற்றை அணிந்து தங்களை பாதுகாத்து வருகின்றனர். மேலும் குளிரால் காலை மற்றும் மாலை நேரங்களில் கடைவீதி களிலும், நகர்ப்புறங்களிலும் பொது மக்களின் நடமாட்டம் குறைந்தே காணப்படுகிறது.*

*தேயிலை செடிகள்*

*ஆங்காங்கே சில இடங்களில் குளிரில் இருந்து தங்களை பாதுகாத்து கொள்ள தீ மூட்டி குளிர்காய்ந்து வருகின்றனர். கடந்த 3 நாட்கள் பெய்த கடுமை யான உறைபனியால் தாழ்வான பகுதிகளில் உள்ள தேயிலை தோட்டங்களில் உள்ள தேயிலை செடிகள் முழுவதும் கருகிவிட்டன.*

*இதனால் ஏற்கனவே மழை யினால் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு அதில் இருந்து மீண்டு எழும் நிலையில் மீண்டும் பாதிப் புக்குள்ளாகி உள்ளனர். இதனை நம்பி உள்ள விவசாயிகளுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள் ளது. இந்த வருடம் முன்கூட்டியே பனிப்பொழிவு ஆரம்பித்ததால் பொதுமக்களும் பல்வேறு இன் னல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.*

## குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் தேக்கம்: பச்சை தேயிலை விலை கடும் வீழ்ச்சி விவசாயிகள் கவலை

*குன்னூர், நவ.15–*

*குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் விற்பனையாகா மல் தேக்கம் அடைந்து வருவதால் குன்னூர் பகுதியில் பச்சை தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டு உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.*

*60 ஆயிரம் சிறு விவசாயிகள்*

*நீலகிரி மாவட்டத்தில் ஆரம்ப கால கட்டத்தில் கம்பெனி எஸ்டேட்டுகள் மட்டுமே தேயிலை சாகுபடி யில் ஈடுபட்டன. பின்னர் அரசின் சலுகை திட்டத்தால் சிறு விவசாயி களும், தேயிலை விவசாயத்தில் ஈடுபட தொடங்கினர்.*

*மாவட்டத்தில் 60 ஆயிரம் விவசாயிகள் தேயிலை சாகு படியில் ஈடுபட்டு வருகின்ற னர். சிறு தேயிலை விவசாயி களுக்காக சிறு தேயிலை தொழிற்சாலைகளும் அமைக் கப்பட்டன. இந்த தேயிலை தொழிற்சாலைகள் சிறு தேயிலை விவசாயிகளுக்கு வார விலை என்றும், மாத விலை என்றும் பச்சை தேயிலைக்கு வழங்கி வரு கின்றன. கடந்த 2000–ம் ஆண்டு தேயிலை விலை வீழ்ச்சிக்கு பின்னர் தேயிலை வாரியமும், உபாசி வேளாண்மை அறிவியல் மையமும் இணைந்து தேயிலை தரமேம்பாட்டு திட்டத்தை மேற்கொண்டன.*

*இதன்படி பச்சை தேயிலை தரம் பிரிக்கப்பட்டு, 'ஏ' கிரேடு, 'பி பிளஸ்' கிரேடு, சாதாரண கிரேடு என மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டு விலை வழங்கப் பட்டு வருகிறது. 'ஏ' கிரேடு மற்றும் 'பி பிளஸ்' கிரேடு பச்சை தேயிலைக்கு கூடுதல் விலை வழங்கப்பட்டு வரு கிறது.*

*விலை வீழ்ச்சி*

கடந்த சில வாரங்களாக தேயிலை ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு கிராக்கி இல்லாததால் தேயிலை தூள் தேக்கம் அடைந்து வருகிறது. இதன் எதிரொலியாக பச்சை தேயிலைக்கும் விலை வீழ்ச்சி ஏற்பட்டு வருகிறது.

10 ரூபாய் வரை விலை கிடைத்து வந்த சாதாரண வகை பச்சை தேயிலைக்கு விலை குறைவு ஏற்பட்டு 8 ரூபாய் என்றும், 8.50 ரூபாய் என்றும் விலை வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் கவலை

கடந்த வாரம் நடைபெற்ற தேயிலை தூள் ஏலத்தில் 39 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. தேயிலை தூள் விற்பனை இல்லாததால் பச்சை தேயிலைக்கும் விலை குறைவு ஏற்பட்டு உள்ளது.

கடந்த 12–ந் தேதி சனிக் கிழமை சாதாரண வகை பச்சை தேயிலைக்கு 8 ரூபாய் என்றும், 8.50 ரூபாய் என்றும் வழங்கப்பட்டு உள்ளது. ‘ஏ’ கிரேடு பச்சை தேயிலைக்கு 14 முதல் 15 ரூபாய் வரையிலும், ‘பி பிளஸ்’ கிரேடு பச்சை தேயிலைக்கு 13 ரூபாய் என்றும் விலை வழங்கப்பட்டு உள் ளது.

தொடர்ந்து தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டு வருவதால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.